# பத்திரிக்கை செய்தி

**திருமண உதவி தொகை மற்றும் தாலிக்கு தங்கம் அரசு திட்டத்திற்கு லஞ்சம் கேட்டு பெற்ற அப்போதைய ஊர்நல அலுவலருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை**

புகார்தாரர் ராமச்சந்திரன், தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, ஆம்பலாப்பட்டு தெற்கு சோமன் தெருவில் வசித்து வந்தார். புகார்தாரர் தன்னுடைய மகள் திருமணத்திற்காக கடந்த 30.05.2017ம் ஆண்டு சமூக நலத்துறையால் வழங்கப்படும் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திருமண உதவித்தொகை மற்றும் தாலிக்கு தங்கம் பெறுவதற்காக ஒரத்தநாடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திருமதி.அஞ்சலிதேவி, ஊர்நல அலுவலர், ஒரத்தநாடு வட்டார வளர்ச்சி அலுவலர் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தஞ்சாவூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது கடந்த 06.07.2017 திருமதி.அஞ்சலிதேவி புகார்தாரரிடமிருந்து ரூ.1,000/- லஞ்சப்பணம் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது கும்பகோணம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 13.02.2025 திருமதி.அஞ்சலிதேவி, ஊர்நல அலுவலருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.4,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.